மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

O.S. No. 115 / 2024

வா.சா.1 – லிங்கம் **16.10.2025**

3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-

நான் 6 லக்க சொத்துக்களுக்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 6 லக்க சொத்துக்களும் எனக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். 1ம் பிரதிவாதி லிங்கம் எனது உறவினரா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை பொறுத்து 2019ல் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது குடும்ப பாகத்தில் எனக்கு கிடைக்கப்பெற்றதாகும். அதன் அடிப்படையில் தாவா சொத்துக்களை நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். 2019ல் 1ம் பிரதிவாதி ஏற்படுத்திக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பற்றி எனக்கு 2024ல் தெரியவந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் சம்மந்தமான வருவாய் துறை ஆவணங்கள் எனது தாத்தா, எனது அப்பா மற்றும் எனது பெயரிலும் உள்ளது. எனது தந்தையின் பெயர் ஆதிமூலத் தேவர். 1ம் பிரதிவாதியின் தந்தையின் பெயரும் ஆதிமூலத்தேவர் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி உரிய வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியங்களின் அடிப்படையிலும் சான்றாவணங்களின் அடிப்படையிலும் பத்திர பதிவு விதிகளுக்கு உட்பட்டு 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணம் 2019ல் ஏற்பட்டுள்ள நிலையில் காலதாமதமாக இந்த வழக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை